## தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்

........................................................................................................................

## 1. நிதிக்கூற்றுக்கள்

..............................

காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை கால கிரயத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

## 1.1 அபிப்பிராயம்

.......................

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

.................................................

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

..............................................................................................................................

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

.........................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன

## 2. நிதி மீளாய்வு

........................

### 2.1 செலவு முகாமைத்துவம்

...............................................

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………….. | …………………… | ....................... |
| (அ) 350 டெப் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 17,500,000 தொகையில் ரூபா 12,075,000 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 31 சதவீதம் அல்லது ரூபா 5,425,000 சேமிக்கப்பட்டிருந்தது. | ஒன்று ரூபா 50,000 வீதம் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு 350 டெப் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான அண்ணளவான மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 17,500,000 மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் திறந்த போட்டி விலை மனுக்கள் கோரியதன் காரணமாக ஒன்று ரூபா 34,500 வீதம் கொள்வனவு செய்யப்பட்டதனால் இச்சேமிப்பு ஏற்பட்டது. | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு** | **ரூபா** | | | |
| 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறறிக்கையின் 4 ஆம் பந்தி | 44,250,000 | 2019 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களம் பயன்படுத்திய வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்றல் சம்பந்தமான சிக்கலைகளைத் தீர்த்து வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அடிக்கடி உரிய அமைச்சு மாற்றமடைதல் கொம்ப்ட் ரோலர் ஜெனராலினால் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொண்டு காணி அமைச்சின் செயலாளர் பெயருக்கு வழங்கியுள்ள வாகனங்களின் | விவசாய காணி அமைச்சும் காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சும் காணி அமைச்சுடன் தொடர்புபட்டிருந்த சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சுக்கைள திருத்தம் செய்த போது புதிய அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனால் உரிய வாகனங்களை எங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாகனங்களை திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உரிமையை குத்தகை முடிவடைந்து இலங்கை வங்கியினால் காணி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படாமையின் காரணத்தினால் ரூபா 44,250,000 பெறுமதியான 09 வாகனங்களை திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்துகொள்ள முடியாதிருந்தது. | எடுக்குமாறு உரிய நிறுவன தலைவர்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கொம்ட்ரோலர் ஜனராலினால் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் காணி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை முடிவடைந்து இலங்கை வங்கியினால் காணி அமைச்சின் செயலாளருக்கு உரிமையை ஒப்படைத்ததன் பின்னர் இத்திணைக்களத்தினால் பொறுப்பேற்கலாம் என குறிப்பிடுகிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

.........................................

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

.........................................................

தூரநேக்கு மற்றும் செயற்பணி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ………………………………….. | …………………… | ..................... |
| திணைக்களத்தின் தூர நோக்காகிய ‘‘இலங்கையின் நில வளத்தினை சிறப்பாகவும் | தேசிய காணி பயன்பாட்டு கொள்கையை திருத்தம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது | தேசிய காணி பயன்பாட்டு கொள்கையை தயாரித்து |

| | | |
|---|---|---|
| நிலையாகவும் பயன்படுத்துதல்'' என்பதற்காக ''சுற்றாடல் சமநிலைத்தன்மையைப் பேணி நிலைபேறாகவும் சிறப்பாகவும் நிலத்தை பயன்படுத்துவதற்கான கொள்கையை உருவாக்குதலும் திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு உதவியளித்தலும்'' என்ற திணைக்களத்தின் செயற்பணிக்காக தேசிய காணிகளை பயன்படுத்துதல் கொள்கையை தயாரிப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்று அக்கொள்கையை திருத்தம் செய்தலை முன்னணி நடவடிக்கையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டளவில் அதன் இறுதி கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

..................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………….. | ……………………. | ............ |
| (அ) திணைக்களத்திடம் 33 வாகனங்கள் காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது வாகன பராமரிப்பிற்காக ரூபா 6,808,378 தொகையும் வாகன புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக ரூபா 2,843,951 தொகையுமாக மொத்தமாக ரூபா 9,652,328 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களம் மற்றும் அலுவலகங்கள் வாகனங்களை திருத்தம் | தலைமை அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் காணி அமைச்சிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கத்தில் பதிவு செய்த நிறுவனங்களினால் | பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக இடம்பெறுகின்ற அதிக காலதாமதத்தினை தவிர்த்துக்கொள்வதற்கு கொழும்பில் இருக்கின்ற வாகனங்கள் சம்பந்தமாக கொழும்பு, தெஹிவளை, கல்கிசை மாநாகர சபை எல்லையிலும் கோட்டை நகரசபை எல்லையிலும் அமைந்துள்ள கராஜ்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருதலும் வாகனங்களை திருத்தம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கராஜ்களிடமிருந்து கேள்வி மனுக்களைக் கோருதலும் செய்யப்பட வேண்டியதுடன் மாகாணங்கள் சம்பந்தமான உரிய மாகாணத்தின் பிரதான நகரத்தில் அமைந்துள்ள கராஜ்களிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஐந்து குளாம் வாகனங்களினதும் வெளி மாகாணங்களின் ஐந்து வாகனங்களினதும் மொத்தமாக ரூபா 1,523,679 தொகையான திருத்தம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் நடவடிக்கைகள் அந்த அலுவலகங்கள் அமைந்துள்ள அதிகார பிரதேசங்களுக்கு வெளியே மாலபேயில் அமைந்துள்ள இரண்டு தனியார் கராஜ்களால் மேற்கொள்ளப்பட்டன. | செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அதில் காட்டப்பட்டுள்ளவாறு விலை மனுக்களை கோருவதற்கு பொருத்தமான நிறுவனங்களை தேடிப்பார்த்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். பிராந்திய அலுவலகங்கள் பிரதான திருத்தங்களை மாத்திரம் முகவர் நிறுவனத்தின் மூலம் செய்வதுடன் மாவட்ட அலுவலகங்களில் நிர்ணயிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகளுக்காக போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாததனால் தலைமை அலுவலகத்தினூடாக பிரதான திருத்தங்கள் செய்யப்படுகின்றன. | |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது கம்பஹா மாவட்ட காணி பயன்பாட்டு அலுவலகத்தில் கடமைகளுக்காக ஒதுக்கப்பட்ட 61-2377 ஆம் இலக்க வேனுக்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது | 61-2377 ஆம் இலக்க வாகனத்தை திருத்தம் செய்ததன் பின்னர் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக அது தொடர்பான தொழில்நுட்ப அறிவுள்ள | பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 322,510 தொகையும் புத்தளம் மாவட்ட காணி பயன்பாட்டு அலுவலகத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்த JV-1497 ஆம் இலக்க கெப் வாகனத்திற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 346,535 தொகையும் செலவு செய்து இயந்திர உள்ளக திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தும் 2022 சனவரி 25 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது 61-2377 ஆம் இலக்க வேனை ஸ்டாட் செய்ய முடியாது என்பதுவும் JV-1497 ஆம் இலக்க கெப் வாகனம் 2021 செப்தெம்பர் 23 ஆந் திகதி ஒயில் குழாய் வெளிவந்து அனைத்து இன்ஜின் ஒயில்களும் வெளியாகியிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களிடமிருந்து சிபாரிசுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை சம்பந்தமாக சாரதியினால் 2022 மார்ச் 08 ஆந் திகதி மேற்கொள்ளாப்பட்ட தெளிவுபடுத்தலின் பிரகாரம் அதன் ஓல்டனேட்டர் மற்றும் ஹீட்மீட்டரினை திருத்தம் செய்தல் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டது. அதில் குறிப்பிட்ட திருத்தங்களுக்கு மத்தியில் வழங்கப்பட்டுள்ள உத்தரவாத காலத்திற்குள் காணப்படுகின்ற திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அதற்குப் புறம்பான திருத்தங்களுக்காக விலை மதிப்பீட்டினைக் கோரி திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>JV-1497 ஆம் இலக்க வாகனத்திற்கு திருத்தம் செய்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இன்ஜின் திருத்தங்களுடன் சம்பந்தப்பட்டது அல்ல என தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளதனால் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன. | |
| (iii) | புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் JV-1497 ஆம் இலக்க கெப் வாகனத்திற்கு இரண்டாவது தடவையாக இன்ஜினை திருத்தம் செய்தல் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டு 2021 நவம்பர் 03 ஆந் திகதி | கராஜினால் வாகனம் குறித்த சில தூரம் பரீட்சிப்பிற்காக ஓடியிருந்த போதிலும் இவ்வாறான தூரம் ஓடியமை தொடர்பாக உரிய நிறுவனத்திடம் காரணம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் | பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாரதியினால் மீளப்பொறுப்பேற்கப்பட்டிருந்தது. நாளாந்த ஓட்ட குறிப்பின் பிரகாரம் அக்காலத்தின் போது கராஜினால் இந்த வாகனம் 427 கிலோ மீற்றர் தூரம் ஓடியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | |
| (iv) | மஹவெலி அதிகார சபையினால் காணி பாவனை கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக 2008 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த 32-6748 ஆம் இலக்க ஜீப் வண்டி 2016 சனவரியிலிருந்து 2022 ஏப்ரல் வரை ஓடாது திணைக்கள வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 மார்ச் 30 ஆந் திகதி வரை அடிக்கடி ரூபா 1,055,011 தொகை திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்டிருந்தமை சச்சரவுத் தன்மையான விடயமாக அவதானிக்கப்பட்டது. | இந்த வாகனத்தின் உரிமை சம்பந்தமான சிக்கலைத் தீர்த்துவைத்து ஓடுவதற்கு ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கும் போது சாரதியினால் வாகனத்தை ஓடுவதற்கு முடியாத நிலை காணப்பட்டதனால் திருத்தம் செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மோட்டார் வாகனத்தை பரீட்சித்து சிபார்சு செய்ததன் பின்னர் திருத்தம் செய்யப்பட்டது. திருத்தம் செய்ததன் பின்னர் 2019 ஏப்ரல் 25 ஆந் திகதி காப்புறுதியும் புகைப் பரிசோதனை சான்றிதழும் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் உரிமை தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்காமையின் காரணமாக வருமான உத்தரவுப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளும் சிக்கல் உருவாகியது. இப்பொழுது அனைத்து நடவடிக்கைகளும் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் அந்த வாகனம் ஓடும் நிலையில் காணப்படுகின்றன. | பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

.......................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………….. | ……………………… | ............... |
| திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 697 ஆக இருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 4 நபர்களையும் உள்ளடக்கி உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 623 ஆக இருந்ததனால் சிரேஷ்ட மட்டத்தின் 16 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தின் ஒரு வெற்றிடம், இரண்டாம் மட்டத்தின் 42 வெற்றிடங்கள், ஆரம்ப மட்டத்தின் 19 வெற்றிடங்களுடன் மொத்த வெற்றிடங்கள் 78 ஆகக் காணப்பட்டிருந்தும் கொவிட் 19 தோற்றுநோய் உள்ளடங்கலாக நாட்டில் தற்பொழுது காணப்படுகின்ற சிக்கல் நிலைமையின் அடிப்படையில் பிரச்சினையின்றி நிறுவனத்தை செயற்படுத்துவதற்காக காணப்படுகின்ற மனித வளங்களை முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என 2021 செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த வெற்றிடமான பதவிகள் திணைக்களத்திற்கு அத்தியவசியமானதாக இருந்தும் அடிக்கடி விதிக்கப்பட்ட சுற்றிக்கைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு நடவடிக்கையாகும். தற்பொழுது உள்ளபடியான பதவியணியினரை முகாமைத்துவம் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் மேலும் சேவைகளை விரிவுபடுத்துதல் சிக்கலாக உள்ளதுடன் திணைக்களத்தின் தொடக்க செயற்பாடுகளை சிறப்பான மட்டத்தில் பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அங்கீகரித்த பதவிகளுக்கு ஊழியர்களை சேர்த்துகொள்வதற்கு அல்லது அங்கீகரித்த பதவியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |